மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம்
19 FEB 2020
திருவண்ணாமலை – 606 604.

13/2/2020

<u>சுருக்கம்</u>

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பயிற்சிப் பிரிவு – வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை – பணியிடை மரணமடைந்த திரு.கி.முருகன், இளநிலை பயிற்சி அலுவலர், உளுந்தூர்பேட்டை அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் என்பவரது மகன் திரு.மு.ராகுல்கிருஷ்ணன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தமிழ்நாடு அமைச்சு பணியில் நியமனம் செய்யப்பட்ட 06.04.2018 மு.ப. முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(ப்பி.2)த் துறை</u>

அரசாணை (டி)எண்.57

நாள் 28.01.2020

விகாரி வருடம், தை 14
திருவள்ளுவர் ஆண்டு 2051

<u>படிக்க:</u>

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.13640/பஅ3/2017, நாள் 30.04.2019 மற்றும் 15.11.2019.

-----

<u>ஆணை:-</u>

இரண்டாவதாகப் படிக்கப்பட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் அவர்களின் கடிதங்களில், உளுந்தூர்பேட்டை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் இளநிலை பயிற்சி அலுவலராகப் பணியாற்றிய போது மரணமடைந்த திரு.கி.முருகன் என்பவரது மகன் திரு.மு.ராகுல்கிருஷ்ணன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரகத்தில் பணிநியமனம் வழங்கப்பட்டு தனியர் 06.04.2018 மு.ப. பணியில் சேர்ந்துள்ளார் என்றும், பணியிடை மரணமடைந்த அரசுப் பணியாளரின் வாரிசுதாரரான அவரது மனைவி திருமதி.மு.குமுதா என்பவர் 24.03.2017–ல் தனது மகன் திரு.மு.ராகுல்கிருஷ்ணன் என்பவருக்கு கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கு விண்ணப்பித்துள்ளார் என்றும், தனியரின் அனைத்து சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு அதனடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு 06.04.2018 மு.ப. இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்துள்ள திரு.மு.ராகுல்கிருஷ்ணன் என்பவரின் பணியினை தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 06.04.2018 மு.ப. முதல் வரன்முறை செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து, முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள ஆணைகளின்படி இந்நேர்வில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப்பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது என்பதால், மேற்கூறிய வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை ஆணையர் அவர்களின் கருத்துருவை ஏற்று பணியிடை மரணமடைந்த

திரு.கி.முருகன், இளநிலை பயிற்சி அலுவலர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், உளுந்தூர்பேட்டை என்பவரது மகன் திரு.மு.ராகுல்கிருஷ்ணன் என்பவருக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை பயிற்சிப் பிரிவில் இளநிலை உதவியாளர் பதவியில் 06.04.2018 மு.ப. முதல் அவர் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வலுவலரின் பணி முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, தனியர் தனது ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் பிற ஊதிய நிலுவைத் தொகை ஆகியவற்றினை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார். இது குறித்து தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

3. இவ்வரசாணை இத்துறையின் 'க்யூ' பிரிவின் அ.சா.கு.எண்.8902/க்யூ–2/2019, நாள் 20.12.2019 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.கு. எண்.43558/ஜி2/2019–1, நாள் 20.01.2020–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

இயக்குநர் (மு.கூ.பொ.), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை–32 (இணைப்பு – அசல் மூலச் சான்றுகள்).

திரு.மு.ராகுல்கிருஷ்ணன், இளநிலை உதவியாளர் (வழி:-இயக்குநர் (மு.கூ.பொ), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை–32.)

சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.

நகல்

அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை – 9.

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை – 9.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ / அந ற–2) துறை, சென்னை – 9.

இருப்பு கோப்பு / உதிரி நகல் / சுத்த நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

உதவி இயக்குநர் (பயிற்சி)
மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம்
வேலைவாய்ப்பு அலுவலகம் முதல் தளம்
திருவண்ணாமலை – 606 604